ஐ.வி.டி.பி.

மலர்

2018

மொட்டு-11

மலர் 32

மகளிர் சுய உதவிக்குழு

புத்துணர்வு இதழ்

ஆகஸ்டு-நவம்பர் 2018

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

கேரள மாநில வெள்ள நிவாரண நிதிக்காக ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்கள் வழங்கியது

₹ 1 கோடி

எல்லா புகழும் ஐ.வி.டி.பி. பெண்களுக்கே!

GOVERNMENT OF KERALA
Pinarayi Vijayan
CHIEF MINISTER

23/10/2018

No. CC3652/2018/CMO

Dear Shri. Kulandai Francis,

I sincerely appreciate your contribution to Chief Minister's Distress Relief Fund. The unprecedented devastating flood in the State put lakhs of people in misery. The Government is making every effort to provide immediate relief and rehabilitation of the affected people.

The timely contribution made by the members of Integrated Village Development Project (IVDP), Krishnagiri district is of great support to the Government's endeavour.

I once again thank you all.

Yours Sincerely,

(PINARAYI VIJAYAN)

SHRI. KULANDAI FRANCIS
President
Integrated Village Development Project (IVDP)
No. 9E, Shanthi Nagar, 3rd Cross
Krishnagiri – 635 001
Tamil Nadu

(Finance Department will provide receipt for your contribution to Chief Minister's Distress Relief Fund)

141, 3rd Floor, North Block
Government Secretariat
Thiruvananthapuram Pin 695001

T 0471 2333241, 2333812, 2333610 F 0471 2333489
E chiefminister@kerala.gov.in
facebook.com/cmokerala twitter.com/cmokerala
www.keralacm.gov.in

Residence
Cliff House
T 0471 2318406, 2314853

முதல்வரின் பாராட்டு கடிதம்

கேரள மாநில வெள்ள நிவாரண நிதிக்காக ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினர்கள் வழங்கிய ₹ 1 கோடிக்கான வரைவோலையை

கேரள மாநில முதல்வர் உயர்திரு. **பினராயி விஜயன்,** அவர்களிடம் ஐ.வி.டி.பி. தலைவர் "ராமன் மகசேசே" திரு. **குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் 15.10.2018 அன்று **திருவனந்தபுரம்** சென்று வழங்கினார்.

வெற்றி வந்தால் நம்பிக்கை வரும்.
ஆனால் நம்பிக்கை இருந்தால் மட்டுமே வெற்றி கிடைக்கும்.
அதனால் நம்பிக்கையை வளர்த்துக் கொள்.

நிறுவனர் இதயத்திலிருந்து...

அன்பு உள்ளங்களே!
உங்கள் அனைவருக்கும்
எனது அன்பு கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல்
நல்வாழ்த்துகளும், வணக்கங்களும்.

''காலத்தினால் செய்த உதவி சிறிதெனினும், ஞாலத்தில் உயர்ந்தது" அன்றோ! **கஜா புயலினால்** கடுமையாக பாதிக்கப்பட்டு தங்கள் உடைமைகள் மற்றும் வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் நமது டெல்டா மாவட்ட மக்களின் துயர் துடைக்க நீங்கள் கொடுத்து வரும் சிறு உதவிகளை ஒருங்கிணைத்து அம்மக்களின் தேவையறிந்து, நம்மால் இயன்ற உதவிகளை வழங்க உள்ளோம்.

இவ்வாறு பலதருணங்களில் உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் தாராள உள்ளத்தை காட்டியுள்ளீர்கள். **கேரள மக்களுக்கு வெள்ள நிவாரணமாக ரூ. 1 கோடியும், புயலால் பாதிக்கப்பட்ட நமது கடலூர் மாவட்ட மக்களுக்கு ரூ. 1.56 கோடி மதிப்பிலான 316 வீடுகளும் நீங்கள் வழங்கிய தாராள உதவிக்கு சில எடுத்துக்காட்டுகள்.**

நமது ஐ.வி.டி.பி. நிறுவனம் 40 ஆண்டுகளை நிறைவு செய்யும் இவ்வேளையில், முக்கியமான சில நினைவுகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விழைகிறேன். ஏனெனில் இந்நிறுவனத்தின் இன்றைய வளர்ச்சிக்கும், நமது மனித நேயப்பணிகளுக்கும் முகம் தெரியாத பல்வேறு நண்பர்கள் நமக்கு உதவியுள்ளனர். அவர்களுக்கு உங்கள் அனைவரின் சார்பிலும் நமது நன்றியை தெரிவிக்கும் பொருட்டு பெல்ஜியம் நாட்டுக்கு பயணம் மேற்கொண்டேன். அங்கு நமது பணிகளுக்கு அடித்தளமாக உதவிய **Sr. Joseecleymans & Mr. Bert Cleymans** மற்றும் பல்வேறு நண்பர்களை சந்தித்து நன்றி தெரிவித்தது ஒரு நெகிழ்ச்சியான நிகழ்வு.

எனவே அன்பு உறுப்பினர்களே, நமது வாழ்விலும் நமக்கு உதவியவர்களை என்றும் நன்றியோடு நினைவு கொள்வோம்.

இப்படிக்கு
"ராமன் மகசேசே"
குழந்தை பிரான்சிஸ்
நிறுவனர் தலைவர் – ஐ.வி.டி.பி.

‘கஜா’ புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு

ரூ. 15 இலட்சம் மதிப்பிலான நிவாரண உதவி ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம் வழங்கியது.

கடந்த மாதம் கஜா புயலினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவையறிந்து அவர்களின் துயர் துடைக்கும் பொருட்டு ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம் உடனடியாக களத்தில் இறங்கி பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக்கரம் நீட்டியது. அதனடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு **ரூ. 3 இலட்சம்** மதிப்பிலான சானிட்டரி நாப்கின்களும், புதுக்கோட்டை மாவட்டம் தோப்புக் கொல்லை கிராமத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வாழும் 526 பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு **ரூ. 5 இலட்சம்** மதிப்பில் சோலார் விளக்குகளும், புதுக்கோட்டை மாவட்டம், ரகுநாதபுரத்தை சுற்றியுள்ள கிராமங்கள் புயலினால் அதிகம் பாதிப்படைந்து, வாழ்வாதாரத்தை இழந்த நிலையில் அந்த குடும்பங்களில் இருந்து வரும் மாணவிகள் மின்சாரம் இல்லாமல் கல்லூரி பருவத்தேர்வுக்கு தயாராக சிரமப்படுகிறார்கள் என அக்சீலியம் கல்லூரி நிர்வாகம் விடுத்த வேண்டுகோளை ஏற்று பாதிக்கப்பட்ட 1500 மாணவிகளுக்கு **ரூ. 7 இலட்சம்** மதிப்பில் சோலார் விளக்குகளும் வழங்கப்பட்டன. **இவை அனைத்தின் மொத்த மதிப்பு ரூ. 15 இலட்சமாகும்.**

புதுக்கோட்டை மாவட்டம் ரகுநாதபுரம் அக்சீலியம் கல்லூரி மாணவிகளுக்கு வழங்கப்பட்ட சோலார் விளக்குகள்

புதுக்கோட்டை மாவட்டம் தோப்புக்கொல்லை கிராமம்
இலங்கை அகதிகள் முகாமில் வாழும் குடும்பங்களுக்கு
வழங்கப்பட்ட சோலார் விளக்குகள்

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட
நிவாரணப் பொருட்கள்

கவிதை

மக்களின் இன்னலை களைத்து இன்பத்தை பெருக்கிட
இறைவனால் பரிசளிக்கப்பட்ட இனிய சேவகன் நீர்,
வாழ்ந்த வீடு போக, வாழ்வு தந்த மரம் போக,
வாழ்க்கையை இழந்து நிற்கும் எங்களுக்கு,
ஆறுதலாய் நீர் செய்த உதவிக்கு - நன்றி, நன்றி
இருட்டில் திசைதெரியா படகாய்,
கல்விக் கடலில் அலைக்கழித்துக் கொண்டிருக்கும் எங்களுக்கு,
கலங்கரை விளக்காய், சூரிய ஒளிவிளக்கை தந்து
எங்கள் வாழ்வில் ஒளி ஏற்றியவர்
எங்கள் வாழ்வு ஆண்டுகளால் அல்ல,
நாம் துணிந்து செய்யும் நல்ல செயல்களால்தான்
என்று வாழ்ந்து கொண்டிருக்கும் வள்ளலே,
நாங்கள் பெற்ற உதவிக்கு நன்றிக்கடனாய் நாங்களும் மாறிவிடுவோமம்
உம்மைப்போல உதவிக்குணம் உள்ளவராய், மனித நேயம் உள்ளவராய்
மற்றவர்களுக்கு சேவை புரிபவராய்

என்று உறுதி கூறி என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

அக்சீலியம் கல்லூரி மாணவி அவிலா,

ரகுநாதபுரம், புதுக்கோட்டை மாவட்டம்

"இயற்கை எம்மை சோதித்த போதும்,
துன்பம் எம்மை பாதித்த போதும்,
துன்புறா வண்ணம், துன்புற்றோர் நெஞ்சில் துயர் துடைத்த
ஐ.வி.டி.பி.-யே! வாழ்க பல்லாண்டு".

உப்பும் உரிமையும் அதிகம் எடுத்தால்
உணவும் உறவும் கசந்து போகும்...!

40 IVDP 1979 2019

ஐ.வி.டி.பி. பணியாளர் குழந்தைகளின் கல்விக்கு

₹ 11 இலட்சம் கல்வி உதவித் தொகை

"பொன்னுடையார் எல்லாம் புகழுடையார்
கல்விக் கண்ணுடையார் எல்லாம் பெறுவர்"

ஐ.வி.டி.பி. நிறுவனம் தமது பணியாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அவற்றுள் பணியாளர் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டமும் ஒன்றாகும்.

இத்திட்டத்தில் உதவி பெற 5 வருடம் தொடர்ந்து ஐ.வி.டி.பி. நிறுவனத்தில் பணியாற்றியிருக்க வேண்டும். முதல் வகுப்பில் இருந்து கல்லூரிக் கல்வி பயில்வோர் வரை அவர்களின் படிப்பிற்கு தகுந்தவாறு உதவித்தொகை வழங்கப்படுகிறது. மேலும் 12 வகுப்பில் முதலிடம் பிடிப்பவருக்கு மடிகணிணியும், 10 வகுப்பில் முதலிடம் பிடிப்பருக்கு 4 கிராம் தங்க நாணயமும் வழங்கப்படுகிறது.

இவ்வருடம் இந்த உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 104 பணியாளர்களின் 176 குழந்தைகளுக்கு ரூ. 11 இலட்சம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது.

இந்த விழாவில் பல்லவன் கிராம வங்கியின் கிருஷ்ணகிரி மண்டல மேலாளர் திரு. பாஸ்கர் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு உதவி தொகையை வழங்கினார்.

இதுவரை ஐ.வி.டி.பி. கூட்டமைப்பு பணியாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை

₹ 90 இலட்சம்

வழங்கப்பட்டுள்ளதாக ஐ.வி.டி.பி. நிறுவனர் தலைவர் தெரிவித்தார்.

ஐ.வி.டி.பி. விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை

₹ 24 இலட்சம்

ஐ.வி.டி.பி.உறுப்பினர்களில் கணவரை இழந்து மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் உறுப்பினர்களுக்காக ஏற்படுத்தப்பட்டதுதான் ஐ.வி.டி.பி. விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை திட்டம், இத்திட்டத்தில் பயன்பெற முந்தைய வருடத்தின் பருவ தேர்வுகளில் தேர்ச்சி பெறுவது அவசியம். தன்தாயின் சூழ்நிலையை உணர்ந்த மாணவர்கள் உதவித்தொகை பெற வேண்டும் என்னும் நோக்கத்தோடு தேர்வில் வெற்றி பெற்று உதவித்தொகை பெறுவது குறிப்பிடத்தக்கது.

இவ்வருடம் 218 உறுப்பினர்களின் கல்லூரிக் கல்வி பயிலும் 234 குழந்தைகளுக்கு ரூ. 24 இலட்சம் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கட்டுமான பொறியாளர் திரு. சதீஷ் அவர்கள் குழந்தைகளுக்கு கல்வி உதவிகளை வழங்கினார்.

“கரம் பிடித்தவன் கைவிட்டு சென்றான்
உயிர் தந்தவன் உறங்கி போனான்
கண் இருண்ட காலத்தில் கைதந்து காத்தவர்
கல்வி கண் தந்து காலம் எல்லாம் ஒளிதந்தவர்”

இதுவரை இத்திட்டத்தில்
₹ 1.73 கோடி
உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் அகாடமி

அனுமந்தபுரம்

ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் அகாடமியில் 11ஆம் ஆண்டாக மாணவர்களுக்கான ஒரு வருட கம்ப்யூட்டர் மற்றும் ஆங்கில பயிற்சி வகுப்புகள் ஜுலை மாதம் துவங்கப்பட்டது. இவ்வருடத்தில் இருந்து அகஸ்டினியன் சபை அருட்சகோதரிகள் இம்மையத்தின் பொறுப்பேற்று மாணவர்களுக்கு கல்வி கற்பித்து வருகின்றனர்.

கிராமப்புற ஏழை மாணவர்களுக்காக துவங்கப்பட்ட இப்பயிற்சி மையத்தில் படிப்பை இடையில் நிறுத்தியவர்களுக்கும், தேர்வில் தோல்வியுற்றவர்களுக்கும், சிறப்பு வகுப்புகள் மூலம் பயிற்சி அளிக்கப்படுகிறது. கணினிக் கல்வியுடன் ஆங்கிலத்தில் சிறப்பு பயிற்சியும் அளிக்கப்படுவதால் ஒருவருட பயிற்சியின் இறுதியில் மாணவர்கள் பயமின்றி உயர்கல்வி பயில்வதற்கும் பணிக்கு செல்வதற்கும் ஏதுவாக அமைகிறது.

இவ்வாண்டு மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி மூலம் பாடபுத்தகங்கள், புத்தகப்பை, ஆங்கில அகராதி, புதிய சீருடைகள் ஆகியவற்றிற்காகவும், கணிணி, யுபிஎஸ் பராமாரிப்பிற்காகவும்

ரூ. 2.7 இலட்சம்

செலவிடப்பட்டுள்ளது.

மேலும் சுதந்திர தின விழா, பெற்றோர் சந்திப்பு போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

நமக்கு பிடிச்சவங்கிட்ட உண்மையா இருக்கனும் என்பதில் ஜெயித்து விடுகிறோம்
ஆனால் அதே உண்மையை அவர்களிடமும் எதிர்பார்க்கும் போதுதான் தோற்றுவிடுகிறோம்!!!

கோட்டையூர் ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி மாணவர்களுக்கு

₹ 5.2 இலட்சம் மதிப்பில்

ஐ.வி.டி.பி.-யின் பல்வேறு கல்விச்சேவைகள்

ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளியானது மலைவாழ், ஏழை மாணவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட பள்ளியாகும். மெட்ரிக் பள்ளியாக உயர்த்தப்பட்ட இப்பள்ளி சென்னை மாதவரம் புனித அன்னாள் சபை அருட்சகோதரிகளின் மேற்பார்வையில் சிறந்து விளங்கி வருகிறது. இப்பள்ளி மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி. மூலம் பல்வேறு கல்வி சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வருடம் மாணவர்களுக்கு பள்ளிச் சீருடைகள், வாட்டர் பாட்டில் போன்றவற்றுடன் தினசரி சிறுதானிய ஊட்டச்சத்து வழங்கும் திட்டம் ஐ.வி.டி.பி. மூலம் செயல்படுத்தப்பட்டுள்ளது. **இவை அனைத்தின் மொத்த மதிப்பு ரூ. 5.2 இலட்சம் ஆகும்.**

இதுவரை இந்தப்பள்ளி மாணவர்களின் நலனுக்காக ஐ.வி.டி.பி. மூலம்

₹ 22 இலட்சம்

வழங்கப்பட்டுள்ளது.

▲ 320 மாணவிகளுக்கு **ரூ. 2.52 இலட்சம்** ஊக்கத்தொகை ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி - அரசு பெண்கள் கலைக் கல்லூரி மாணவிகளுக்கு பல்வேறு வகையான திறன் வளர்ப்பு பயிற்சிகளும், பரிசுகளும்

₹ 5 இலட்சம் மதிப்பில்

ஐ.வி.டி.பி.நிறுவனம் வழங்கியது.

ஐ.வி.டி.பி.-யின் பல்வேறு சேவகைளில் முதன்மையானதாக விளங்குவது கல்விச் சேவையாகும். சிறப்பாக கிருஷ்ணகிரி அரசு பெண்கள் கலைக் கல்லூரி மாணவிகளின் வளர்ச்சிக்காக ஐ.வி.டி.பி. மூலம் பல்வேறு வகையான கல்விப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டுகளில் அக்கல்லூரியின் சீரமைப்பு பணிகளுக்கும், டெஸ்க், பெஞ்ச், நாற்காலிகள், ஜெனரெட்டர் போன்றவை வழங்கப்பட்டுள்ளன.

மாணவிகளுக்கு அடிப்படை ஆங்கில பயிற்சி, ஆளுமைத்திறன் மேம்பாடு பயிற்சி, வேலைவாய்ப்பு திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகியவற்றுடன் கடந்த வருடத்தில் இருந்து தையல்பயிற்சி, கணினிப்பயிற்சி, செல்போன் பழுதுபார்த்தல் பயிற்சி, அழகுக்கலை பயிற்சி ஆகியவையும் ஐ.வி.டி.பி. மூலம் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் மாணவிகள் பருவத்தேர்வுகளில் தோல்வி அடையாமல் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கில் அவர்களை ஊக்கப்படுத்த இரண்டு பருவதேர்வுகளில் வெற்றி பெற்ற 184 மாணவிகளுக்கு ரூ. 1,000 மும், ஒரு பருவ தேர்வில் வெற்றி பெற்ற 136 மாணவிகளுக்கு ரூ. 500 ம் மொத்தம் 320 மாணவிகளுக்கு ரூ. 2,52,000/- ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது.

அடிமைபட்டு கிடந்தோம் – சமையலறையால்
கடிவாளம் போட்டு கிடந்தோம் – கலியுகத்தால்
மடமை போக்கினோம் – கல்லூரியால்
ஆளுமை படைத்தோம் – ஐ.வி.டி.பியால்

உனக்கு சரி என்று பட்டதை சொன்னதற்காக மன்னிப்பு கேட்காதே.
அது நீ உண்மையாக இருப்பதை நீயே மதிக்கவில்லை என்பதாகிவிடும்.

▲ Tally பயிற்சிக்காக ரூ. 51,500 வழங்கப்பட்டுள்ளது.

▲ மாணவிகளின் தையல் பயிற்சிக்காக 10 தையல் இயந்திரங்கள் வழங்கியதோடு தையல் பயிற்சியும் ஐ.வி.டி.பி. நிறுவனம் வழங்கியது. அதற்கு ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 1.2 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

இவை அனைத்திற்கும் மொத்தம் **ரூ. 5 இலட்சம்** ஐ.வி.டி.பி. வழங்கியுள்ளது. இதுவரை இக்கல்லூரிக்கு **₹ 45 இலட்சம்** மதிப்பிலான பல்வேறு பணிகள் ஐ.வி.டி.பி. மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

IELC MANN SCHOOL, BARGUR

மாற்றுத் திறனாளி மாணவர்கள் உணவருந்த மேஜை - நாற்காலிகள்

₹ 1.6 இலட்சம் மதிப்பில் ஐ.வி.டி.பி. வழங்கியது

"மாற்றம் கொண்ட திறனாளிகள் நாங்கள்,
ஏமாற்றம் கொள்ளா திறனாளிகள் நாங்கள்"

பர்கூரில் இயங்கி வரும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கான பள்ளியில் 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். பள்ளி நிர்வாகம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கி அப்பள்ளியை பார்வையிட்ட ஐ.வி.டி.பி. தலைவர் அந்த மாணவர்களின் நலனுக்காக அவர்கள் உணவருந்த ஏதுவாக **ரூ. 1.6 இலட்சம் மதிப்பில் மேஜை மற்றும் நாற்காலிகளை வழங்கினார்.**

பெற்றோரை இழந்த கல்லூரி மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி.-யின் கல்வி உதவித் தொகை திட்டம்

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரிக்கு ₹ 7.75 இலட்சம்

ஐ.வி.டி.பி. கல்வி உதவித்தொகை திட்டங்களுள் Orphan or Semi Orphan கல்வி உதவித் தொகை திட்டமும் ஒன்றாகும். இந்த திட்டத்தின் கீழ் பெற்றோரில் ஒருவரை இழந்த மாணவருக்கு ரூ. 5000-ம், இருவரையும் இழந்த மாணவர்களுக்கு ரூ. 10000-ம் என கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2018-2019 ஆம் ஆண்டிற்கான இந்த திட்டத்தில் வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் பயிலும் 150 மாணவர்களுக்கு ரூ 7.75 இலட்சம் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டது.

முகம் கழுவியது மேகம்...
சுத்தமாகியது பூமி - மழை

அத்திமுகம் ARS இல்ல மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி. ₹ 40 ஆயிரம் மதிப்பில் நன்கொடை

"காடு, மேடு கண்டு களித்திருந்தோம், நாடு நடப்பு கண்டு விழித்திருப்போம்"

இருளர் இன நாடோடி மக்களின் குழந்தைகளுக்காக அத்திமுகத்தில் **ARS** பள்ளியானது செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியை சர்வண்ட் ஆப் மேரி இமாகுலேட் சபை அருட்சகோதரிகள் வழிநடத்துகின்றனர். இச்சிறப்பு பள்ளியின் முக்கிய நோக்கம் குழந்தைகள் அவர்கள் பெற்றோர்களைப்போல நாடோடிகளாக இல்லாமல் இக்குழந்தைகள் அனைவரும் சிறந்த கல்வியையும், வேலைவாய்ப்பையும் பெற்று சமுதாயத்தில் சிறந்த நிலையை அடைய வேண்டும் என்பதாகும். அடிப்படை கல்வி கூட பெறாத அவர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்களையும், ஒழுக்கத்தையும, கல்வியையும், கற்பித்து அக்குழந்தைகள் பன்முக திறன் கொண்டவர்களாக உருவாக்குவதில் அருட்சகோதரிகளின் பங்கு அளப்பரியது.

அருட்சகோதரிகளின் சேவையை ஊக்கப்படுத்தும் வண்ணமும், குழந்தைகள் நலனை கருத்தில் கொண்டும் ஐ.வி.டி.பி. பல்வேறு வகையில் அவர்களுக்கு உதவி வழங்கி வருகிறது. அதன் தொடர்ச்சியாக கடந்த செப்டம்பர் மாதம் மாணவர்கள் அன்றாட நிகழ்வுகளை அறிந்து கொள்ள ஏதுவாக ரூ. 40 ஆயிரம் மதிப்பில் LED TV நன்கொடையாக வழங்கியது. இதுவரை இந்த இல்லத்திற்கு ரூ. 7.2 இலட்சம் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

ஐ.வி.டி.பி.-யின் உதவும் கரங்கள்

கவிதை

முப்பது வருசம் உழைத்து உழைத்து
முக்காப்படியும் மிஞ்சலை, முக்காப்படியும் மிஞ்சலை
மூலை, மூலைக்கு கடனை வாங்கி,
மூச்சு திண்றது, வழியில்லை, மூச்சு திணறது, வழியில்லை.
தாத்தா குடுத்த நிலத்தில் பாதி,
அடகு மேலே போனது, அடகு மேலே போனது,
மீதி பாதி பயிர்செய்யாம,
தரிசு நிலமானது, தரிசு நிலமானது,
மனசு நொந்து இருக்கும் போது
ஐ.வி.டி.பி. தெரிந்தது, ஐ.வி.டி.பி. தெரிந்தது.
குழுக்கள் மூலம் கடனை வாங்கி
முன்னேறும் வழியும் தெரிந்தது, முன்னேற்றமும் ஆனது.

ஐ.வி.டி.பிக்கு என் நன்றி
M.G. மங்கை ராஜா,
வைரநெஞ்சம் மகளிர் மன்றம்,
புதுக்கரும்பு,
தருமபுரி கிளை

கிருஷ்ணகிரி புனித அன்னாள் பள்ளி மாணவிகளுக்கும், ஆசிரியர்களுக்கும் ஐ.வி.டி.பி. மூலம்

₹ 1.3 இலட்சம் மதிப்பில் பல்வேறு உதவிகள் ஐ.வி.டி.பி. வழங்கியது

புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியானது கிருஷ்ணகிரியில் இயங்கி வரும் சிறந்த பள்ளிகளுள் ஒன்றாகும். இப்பள்ளியின் சேவையை பாராட்டி ஐ.வி.டி.பி.யானது பல்வேறு வகையில் மாணவிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் ஊக்கமளித்து வருகிறது.

அதன் தொடர்ச்சியாக பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் குற்றாலம் மற்றும் கன்னியாகுமாரி சுற்றுலா சென்று வர போக்குவரத்து செலவை ஐ.வி.டி.பி. நிறுவனம் ஏற்றுக்கொண்டது. மேலும் சுற்றுலா செல்லும் ஆசிரியர்களுக்கு தேவையான வாட்டர் பாட்டில்கள் ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டது. மேலும் 9 முதல் 12 வகுப்பு வரையான மாணவர்களுக்கு நினைவாற்றல் மற்றும் ஊக்கப்படுத்துதல் பயிற்சியானது மேட்டுப்பாளையத்தை சேர்ந்த பயிற்சியாளர் திரு. விஜயகுமார் வழியாக ஐ.வி.டி.பி. கலையரங்கில் இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இப்பயிற்சி மற்றும் அனைத்து உதவிகளின் மொத்த மதிப்பு ரூ. 1.3 இலட்சமாகும்.

புனித அன்னாள் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி ஆசிரியர்களுக்கு பரிசுகள்

புனித அன்னாள் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளி கிருஷ்ணகிரி நகரில் அடிப்படை கல்வியை சிறந்த முறையில் போதிக்கும் பள்ளியாக திகழ்கிறது. இங்குள்ள ஆசிரியர்களின் பணியை பாராட்டி ஐ.வி.டி.பி. மூலம் டின்னர் செட், சீருடை, வாட்டர் பாட்டில்கள் ஆகியவை **ரூ. 1.5 இலட்சம்** மதிப்பில் ஆசிரியர்களுக்கு பரிசாக வழங்கப்பட்டது. மேலும் மாணவர்கள் அனைவருக்கும் கேக் நன்கொடையாக வழங்கப்பட்டது. **இதுவரை புனித அன்னாள் பள்ளி வளர்ச்சிக்காக ஐ.வி.டி.பி. ரூ. 36.3 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.**

மழலை மனம் மாறாத குழந்தைகளுக்கு
மழலை மனத்துடன் கல்வி தந்தவர்களுக்கு
மழலை மனம் கொண்டவரின் பரிசுகள்

தோடு மூளையின் செயல் திறன் அதிகரிக்கும், கண்பார்வை திறன் கூடும்.

தருமபுரி அக்சீலியம் பள்ளி ஆசிரியர்களுக்கு

ரூ. 1 இலட்சம் மதிப்பில் டின்னர் செட் ஐ.வி.டி.பி. நன்கொடை

தருமபுரி அக்சீலியம் பள்ளியானது பெண் குழந்தைகளுக்கு சிறந்த கல்வியையும், ஒழுக்கத்தையும் கற்பிக்கும் சிறந்த பள்ளியாகும். அருட்சகோதரிகள் சேவை உள்ளத்துடனும், ஆசிரியர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடனும் பணிபுரிந்து வருகின்றனர். அவர்களை ஊக்கப்படுத்தி **ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 1 இலட்சம் மதிப்பில் 27 டின்னர் செட் பரிசாக வழங்கப்பட்டது.**

ஐ.வி.டி.பி. சுய உதவிக்குழு உறுப்பினரின் மனித நேயம்

திருமதி. சோழராணி அவர்களின் உதவும் உள்ளத்தை அறிந்து ஐ.வி.டி.பி. தலைவர் பாராட்டினார்.

ஐ.வி.டி.பி.-யின் மனித நேயப்பணிகளால் ஈர்க்கப்பட்ட வெள்ளிச்சந்தை கிளை, ஒளி அரசி மகளிர் மன்ற உறுப்பினர் திருமதி. சோழராணி அவர்கள், தானும் இனிவரும் வருடங்களில் கல்லூரிக் கல்வி பயிலும் மாணவிகளின் கல்விக்காக உதவுவேன் என்று முன்வந்து கொன்சாகா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் அர்ச்சனா என்ற மாற்றுத்திறனாளி மாணவிக்கு ரூ. 10,000 நன்கொடை அளித்தார்.

"கண்ணீர் சிந்திய குழந்தைகளுக்கு, தூய தண்ணீரை தந்த குழந்தை ஐயாவிற்கு நன்றிகள்"

திருப்பத்தூர் டோம்னிக் சாவியோ இல்ல மாணவர்களுக்கு குடிநீர் சுத்திகரிப்பான் மற்றும் வாட்டர் பாட்டில் ரூ. 1.8 இலட்சம் மதிப்பில் ஐ.வி.டி.பி. நன்கொடை

வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் புனித டோம்னிக் சாவியோ மாணவர் இல்ல மாணவர்களுக்கு தூய்மையான குடிநீர் வழங்க வழி செய்ய வேண்டும் என இல்ல நிர்வாகி அருட்தந்தை. சத்தியநாதன் அவர்கள் கேட்டுக்கொண்டார். **அதை ஏற்று ஐ.வி.டி.பி. மூலம் ரூ. 1.5 இலட்சம் மதிப்பில் குடிநீர் சுத்திகரிப்பானும், ரூ. 30 ஆயிரம் மதிப்பில் வாட்டர் பாட்டில்களும், ஒரு நாள் இரவு உணவும் ரூ. 1.8 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டது.**

தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளி அ.நா. மங்கலம் பள்ளி மாணவர்களுக்கு வாட்டர் பாட்டில்கள் ரூ. 4 இலட்சம் மதிப்பில் ஐ.வி.டி.பி. நன்கொடை

தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கல்வி, கலை நிகழ்ச்சிகள், விளையாட்டு என அனைத்து துறைகளிலும் சிறந்து விளங்குகின்றனர். இந்த பள்ளி மாணவர்களின் திறமையை பாராட்டி அனைத்து மாணவர்களுக்கும் ஐ.வி.டி.பி. மூலம் **ரூ. 4 இலட்சம்** மதிப்பில் வாட்டர் பாட்டில்கள் வழங்கப்பட்டன.

மேலும் 10ஆம் வகுப்பிலும் 12ஆம் வகுப்பிலும் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு தலா 1 கிராம் தங்க நாணயம் பரிசாக வழங்கப்பட்டது. இதுவரை இந்த பள்ளியின் வளர்ச்சி பணிகளுக்காக ஐ.வி.டி.பி. ரூ. 32 இலட்சம் வழங்கியுள்ளது.

சந்தனம் கூட குறிப்பிட்ட தூரம் வரையே மணக்கும்
ஆனால் நல்லவர்களின் செயல்கள் நாலா திசைகளிலும் பரவும்.

தெலுங்கு வழியில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஐ.வி.டி.பி. "வெற்றி நம் கையில்" இலவச வினாவிடை கையேடு ரூ. 5 இலட்சம் மதிப்பில் வெளியீடு

"தன் மொழியில் நிறைகள் உள்ளபோதும் பிறர் மொழிக்கும் உரைகள் தந்தவர் நீர்"

கல்வியில் பின்தங்கியுள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் சிறப்புடன் கல்வி பயிலவும், நம்பிக்கையோடு தங்களது 10 மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வை எதிர்கொள்ளவும், மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கவும் ஆண்டு தோறும் ஐ.வி.டி.பி. நிறுவனம் சிறந்த ஆசிரியர்களைக் கொண்டு **"வெற்றி நம் கையில்"** எனும் வினாவிடை தொகுப்பு நூலைத் தயாரித்து அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் இலவசமாக வழங்கி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தெலுங்கு வழியில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பில் பயிலும் மாணவர்களுக்காக ஐ.வி.டி.பி. மூலம் **"வெற்றி நம் கையில்"** வினாவிடை கையேடு தயாரிக்கப்பட்டு 09.11.2018 அன்று ஒசூர் செயிண்ட் ஜோசப் மெட்ரிக் பள்ளியில் வெளியிடப்பட்டது.

"வெற்றி நம் கையில்" கையேடு வெளியீட்டு விழாவில் கலந்து கொண்ட கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் உயர்திரு. **பிரபாகர்**, இ.ஆ.ப. அவர்கள் இந்த கையேட்டை வெளியிட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மாண்புமிகு. **பாலகிருஷ்ண ரெட்டி** அவர்கள் பெற்றுக் கொண்டு அதை பள்ளி மாணவர்களுக்கு வழங்கினார். கிருஷ்ணகிரி மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. **மகேஸ்வரி** அவர்களும், ஒசூர் மற்றும் தேன்கனிக்கோட்டை மாவட்ட கல்வி அலுவலர்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் தெலுங்கு வழியில் இந்த புத்தகத்தை தயாரிக்க உதவிய 36 ஆசிரியர்களை பாராட்டி அவர்களுக்கு தலா ரூ. 1300 மதிப்புள்ள Fastrack பேக் மொத்தம் ரூ. 47 ஆயிரம் மதிப்பில் பரிசாக வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு தெலுங்கு மொழியில் வெளியிடப்பட்ட புத்தகங்களின் மதிப்பு ரூ. 5 இலட்சம் ஆகும். இதுவரை தமிழ், ஆங்கிலம் மற்றும் தெலுங்கு வழியில் "வெற்றி நம் கையில்" கையேடு நூல் வெளியிட ஐ.வி.டி.பி. நிறுவனம் ரூ. 3.85 கோடி செலவிட்டுள்ளது.

நன்றி பயணம்... பெல்ஜியம்

JOURNEY OF GRATITUDE

As we express our gratitude, we must never forget that the highest appreciation is not to utter words, but to live by them.

- ***Mr. Bert Cleymans & Family***
  Former General Secretary, NCOS, Belgium

- ***Mr. Dirk. Vanesbroeck***
  Former Evaluation Officer - South Research for IVDP

காரணம் இல்லாமல் களைந்து போக இது கனவும் இல்லை
காரணம் சொல்லி பிரிந்து போக இது காதலும் இல்லை
உயிர் உள்ளவரை தொடரும் உண்மையான நட்பு

நன்றி பயணம்... பெல்ஜியம்

Mr. Pol. Vandevoort
Former Development Officer for India - NCOS

***Rev. Sr. Joseecleymans*, ICM**
ஐ.வி.டி.பி. நிறுவனத்தின் துவக்க காலத்தில் ஐ.வி.டி.பி. யின் வளர்ச்சிக்கு அடித்தளமாக இருந்தவர்.

You have inspired and motivated us during difficult times when we needed the support; you are a blessing in our life. Thanks for all your support.

\- Ramon Magsaysay **KULANDAI FRANCIS**
Founder/President - IVDP

கேட்பவை எல்லாம் கிடைத்தவிட்டால் வாழ்கையில ரசனை இருக்காது
கிடைத்தவை எல்லாம் நிலைத்துவிட்டால் கேட்பதற்கு எதுவும் இருக்காது.

தொழுநோய் ஒழிப்பு திட்டங்களுக்காக மும்பை அலார்ட் இந்தியா நிறுவனத்திற்கு **ஐ.வி.டி.பி. ரூ. 10 இலட்சம் நன்கொடை**

மனிதனே மனிதனை தொட அஞ்சும் நோய் - தொழுநோய். அந்த தொழுநோயாளிகளின் மறுவாழ்விற்கென பல தொண்டு நிறுவனங்கள் சேவை உள்ளத்துடன் செயல்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒன்று தொழுநோயாளிகளுக்காக மும்பையில் செயல்படும் அலார்ட் இந்தியா எனும் நிறுவனம். மும்பை மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் தொழுநோயாளிகளுக்கு சேவை செய்யும் **இந்நிறுவனத்தை பாராட்டி ஐ.வி.டி.பி. ரூ. 10 இலட்சம் நன்கொடை வழங்கியது.**

இதுவரை இந்நிறுவனத்திற்கு ஐ.வி.டி.பி. ரூ. 25 இலட்சம் உதவி அளித்துள்ளது.

சென்னை - களஞ்சியம் அமைப்பிற்கு சோலார் விளக்கு நன்கொடை

சென்னையின் தெருக்களில் வாழும் மக்களுக்கு உதவும் நோக்கத்தோடு செயல்படும் களஞ்சியம் என்ற அமைப்பிற்கு ஐ.வி.டி.பி. மூலம் சென்ற ஆண்டில் நடைபாதையில் வாழ்வோர் போர்த்திக் கொள்ள ஏதுவாக போர்வை வழங்கப்பட்டது. இவ்வருடம் அவர்களின் வேண்டுகோளை ஏற்று பள்ளி மாணவர்களுக்கு உதவும் வகையில் **ரூ. 47 ஆயிரம் மதிப்பிலான 100 சோலார் விளக்குகள் வழங்கப்பட்டது.**

ஒரு மனிதன் செய்யக்கூடிய செயல்கள் அனைத்திலும் மிகச் சிறந்தது தனக்குத்தானே முற்றிலும் நல்லவனாக இருப்பதுதான்...

உலக அதிசயங்களில்
ஒன்றான
சீன பெருஞ்சுவர் மீது
ஐ.வி.டி.பி. நிறுவனர்



பாரீஸ் மாநகரிலுள்ள
ஈபிள் கோபுரத்தின்
முன் ஐ.வி.டி.பி.
நிறுவனர்

உரிமை இல்லாத உறவும், உண்மை இல்லாத அன்பும்,
நேர்மை இல்லாத நட்பும், நம்பிக்கை இல்லாத வாழ்க்கையும்,
என்றும் நிரந்தரம் இல்லை...!

ஐ.வி.டி.பி. நிறுவனத்திற்கு வருகை புரிந்தவர்கள்

ஐ.வி.டி.பி. தலைவருடன் **d-light** நிறுவன பொதுமேலாளர் திரு. கமல் லாத், திரு. சச்சின் பதக், முதுநிலை இயக்குநர்

விளாத்திக்குளம், வேம்பு தொண்டு நிறுவன பணியாளர்களின் கற்றல் பயணம்

சகாயதோட்டம், தொன்போஸ்கோ வேளாண்மைக் கல்லூரி மாணவிகளோடு ஐ.வி.டி.பி. தலைவர்

பெங்களூர் அசீம் பிரேம்ஜி பல்கலைக் கழக ஆய்வு மாணவர்களுடன் ஐ.வி.டி.பி. தலைவர்

ஐ.வி.டி.பி. தலைவருடன் தருமபுரி தொன்போஸ்கோ கல்லூரி சமூகப் பணி கல்வி பயிலும் மாணவர்கள்

40 1979 IVDP 2019

எல்லாவிதமான நட்புக்களின் பின்னாலும் ஒருவரது சுயநலம் இருக்கும்...
சுயநலம் இல்லாத நட்பு என்பது இல்லை.
இது ஒரு கசப்பான உண்மை...

ஐ.வி.டி.பி. தலைவர் கலந்த கொண்ட விழாக்கள்

ஒய்வு பெற்ற வருவாய் அலுவலர்களின் ஒன்று கூடல் விழா

16 ஆண்டுகளை நிறைவு செய்த மாரண்டஹள்ளி ‘மகாலட்சுமி’ சுய உதவிக்குழு உறுப்பினர்களோடு ஐ.வி.டி.பி. தலைவர்

காவலன் SOS
குடிமக்கள் பாதுகாப்பு செயலி அறிமுக விழா

TVS XL 100 - HITOUCH START
புதிய மாடல் வண்டி அறிமுக விழா

ஒரு பெண்ணுக்கு எது பிடிக்கும்னு தெரிந்த ஆணாலும்
ஒரு ஆணுக்கு எது பிடிக்காதுனு தெரிந்த பெண்ணாலும் மட்டும்தான்
எப்போதாவது இல்லாமல் எப்போதுமே சந்தோசமாக இருக்க முடிகிறது!!!

சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே ரூ.85 இலட்சம் மதிப்பிலான பெல்லா நிறுவனத்தின் காட்டன் பட்ஸ் அறிமுக விழா

ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் அனைவரும் காதுகளின் மேற்புறத்தை பாதுகாப்பான முறையில் சுத்தம் செய்வதற்கு சுகாதாரமான முறையில் தயாரிக்கப்பட்ட காட்டன் பட்ஸ்-களை உபயோகப்படுத்தும் பொருட்டு பெல்லா நிறுவனத்தின் காட்டன் பட்ஸ் அறிமுக விழா 30.08.2018 அன்று நடைபெற்றது.

காட்டன் பட்ஸ்-களை கொண்டு காதுகளின் வெளிப்புறத்தை மட்டும் சுத்தப்படுத்த வேண்டும் எனவும், உட்புறம் இயற்கையிலேயே சுத்தப்படுத்தப்படுகிறது என்றும் நாம் விழிப்புணர்வு இன்றி காதுகளை குடையும் கோழி இறகு, ஏர்பின், குச்சி போன்றவற்றால் காதுகள் விரைவில் கேட்கும் தன்மையை இழந்து விடும் என்றும் கூறிய ஐ.வி.டி.பி. நிறுவனர், சுய உதவிக் குழு உறுப்பினர்களிடையே காட்டன் பட்ஸை அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.

இவ்விழாவில் 2,04,858 காட்டன் பட்ஸ் பெட்டிகளுக்கு கொள்முதல் ஆணையையும் ரூ. 85 இலட்சம் மதிப்பிலான காசோலையையும் ஐ.வி.டி.பி. நிறுவனர் அவர்கள் பெல்லா நிறுவன மேலாண்மை இயக்குநர் அலினா அவர்களிடம் வழங்கினார்.

மாறி விடும் மனிதர்கள் இரு கேள்விகளை மட்டுமே விட்டுச் செல்கிறார்கள்... இது வரை நடித்தார்களா...? அல்லது இப்போது நடிக்கிறார்களா...?

மனித உடலில் காதுகள்

ஒரு இன்றியமையாத உறுப்பு

- அவைகள் கேட்கும் பணி மட்டுமின்றி உடலை சமநிலைப்படுத்துதல், கட்டுப்படுத்துல் போன்ற முக்கிய பணிகளை செய்கிறது.
- காதுகளின் அமைப்பு மூன்று பிரிவுகளாக உள்ளது. வெளிக்காது, நடுக்காது, உள் காது, இதில் செவிப்பறை என்பது நடு காதில் இருக்கும் ஒரு மெல்லிய சவ்வு.
- மேலும் மனித உடலில் உள்ள நரம்புகளில் மிக சிறிய நரம்பு நடு காதில் உள்ளது. அந்த நரம்பின் மீது பொருள் பட்டாலே சேதப்படும் வாய்ப்பு உள்ளது,
- காதுகள் எப்போதும் உலர்வாக இருக்க வேண்டிய உறுப்பு ஆகும். அதனால் குளிர்ந்த காற்று, குளிர்ந்த நீர் காதுக்குள் போக கூடாது. அது காதின் ஆரோக்கியத்தை கெடுத்து பாதிப்பை உண்டாக்கும்.

100% Cotton

M.R.P **Rs. 59**

IVDP Special Price Rs. 44.25

(25% Discount)

காட்டன் பட்ஸ்
உபயோகிக்கும் வழிமுறைகள்

- ☑ காதின் மேற்புறத்தை காட்டன் பட்ஸ் கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.
- ☑ மென்மையான பாகங்களில் உள்ள காயங்களில் மருந்து தடவப் பயன்படுத்தலாம்.

காட்டன் பட்ஸ் ஏன்?

- காட்டன் பட்ஸ் நவீன தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படுகிறது. அதனால் பஞ்சு இழைகள் அல்லது துகள்கள் பிரிந்து வருவதில்லை.
- இதில் சுத்தமான பருத்தி பஞ்சு உபயோகப்படுத்தப்படுகிறது. எந்தவித இரசாயனக் கலவையும் சேர்க்கப்படவில்லை.
- அதனால் தோலுக்கு எந்த வித அலர்ஜியோ, பாதிப்போ ஏற்படாது.

தவிர்க்க வேண்டியவைகள்

குச்சி, சாவி, ஊக்கு, கொண்டை ஊசி இரும்பு குச்சி, பென்சில்

கோடிக்கணக்கான மக்களால் தினம் தினம் சொல்லப்படுகின்ற மிகப் பெரிய பொய் - நான் நலமாக இருக்கிறேன்.

40 IVDP 1979 2019

நாகப்பட்டினம் SOS குழந்தைகள் கிராமத்திற்கு ரூ. 90 ஆயிரம் மதிப்பில் சோலார் விளக்குகள் நன்கொடை

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் நகரில் **SOS** குழந்தைகள் கிராமம் செயல்பட்டு வருகிறது. அங்கு பெற்றோர்களை இழந்த குழந்தைகள் குடும்ப சூழ்நிலையில் வாழ வேண்டும் என்பதற்காக தாயாக ஒருவரை நியமித்து வீடு மற்றும் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தி கொடுப்பதுடன் அவர்களின் திறமைக்கு ஏற்றவாறு பள்ளி மற்றும் கல்லூரியில் படிக்கவும் ஏற்பாடு செய்கின்றனர். அங்கு ஏற்படும் மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக அவர்களின் படிப்பு தடைபடுவதால் சோலார் விளக்கு அளித்து உதவுமாறு **SOS** நிர்வாகத்தினர் ஐ.வி.டி.பி. நிறுவனத்தை அணுகி கேட்டுக் கொண்டனர். **அவர்களின் வேண்டுகோலை ஏற்று ரூ. 90 ஆயிரம் மதிப்பில் 180 சோலார் விளக்குகள் ஐ.வி.டி.பி. மூலம் வழங்கப்பட்டன.**

தருமபுரி மறைமாவட்ட அளவிலான ஆசிரியர் தின விழாவிற்கு ஐ.வி.டி.பி. நிறுவனம் ரூ. 40 ஆயிரம் உதவி

செப்டம்பர் மாதம் 21 ஆம் தேதி தருமபுரி மறைமாவட்ட அளவிலான ஆசிரியர் தின விழா ஐ.வி.டி.பி. கலையரங்கில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு தருமபுரி மறைமாவட்ட மேதகு லாரன்ஸ் பயஸ் அவர்கள் தலைமை தாங்கினார். அன்றைய தினத்தில் கலந்து கொண்ட ஆசிரியர்கள் அனைவருக்கும் **ஐ.வி.டி.பி. சார்பில் ரூ. 40 ஆயிரம் மதிப்பில் உணவு அளிக்கப்பட்டது.**

மகள்களிடம் பேசுங்கள்... மகன்களிடம் விளையாடுங்கள்...
அவர்களை விட நல்ல நண்பர்கள் வேறு யாரும் இருக்க முடியாது...!!!

காவலன் SOS

கிருஷ்ணகிரி மாவட்ட காவல்துறை

KAVALAN SOS

மேலும் விவரங்களுக்கு : +91 **9498212693**



காவலன் குடிமக்கள் பாதுகாப்பு செயலி

01. அனைத்து **Android** மற்றும் **iphone** களில் பயன்படுத்தலாம்.

02. அவசர உதவிக்கு **SOS** பட்டனை ஒருமுறை தொட்டாலே போதும்.

03. அழைப்பவரின் இருப்பிடம் உடனே **OPS** மூலம் அறியப்படும்.

04. அழைப்பவரை உடனடியாக திரும்ப அழைக்கும் வசதி **SPMCR**ல் உள்ளது.

05. அழைப்பவரின் கனநேரம் கண்காணிப்பு **(Resi time tracking)** வசதி உள்ளது.

06. அழைப்பவரின் இருப்பிட தகவல்கள் மற்றும் வரைப்படம் அவர் இந்த செயலியில் பதிவு செய்துள்ளவர்களின் எண்களுக்கு தானாகவே பகிரப்படும்.

07. காவலன் பட்டனில் தொட்டாலே போதும் உடனடியாக **GPS** இயங்க ஆரம்பித்து அலைபேசி கேமரா தானாகவே **15** வினாடிகள் ஒலி, ஒளியுடன் கூடிய வீடியோ எடுத்து காவல் கட்டுப்பாட்டு மையத்திற்கு அனுப்பிவிடும்.

08. இணைய இணைப்பு இல்லாத **(Data not available places)** இடங்களிலும் தானியங்கி **SMS** எச்சரிக்கை **(Auto SMS Alert)** மூலமாக செயல்படும்.

09. அதிர்வு தூண்டல் **(Shake Trigger)** வசதியின் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

10. ஆங்கிலம் மற்றும் தமிழ் என இருமொழிகளிலும் வசதி உள்ளது.

ஆகஸ்டு 2018ல் இருந்து நவம்பர் 2018 வரையிலான ஐ.வி.டி.பி. குழுக்களின் விபரம்

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள் : கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் வேலூர்.
ஐ.வி.டி.பி. கிளை அலுவலகங்கள் : 69

விவரம்	ஜுலை 2018 வரை	ஆகஸ்டு 2018-நவம்பர் 2018	நவம்பர் 2018 வரை
ஐ.வி.டி.பி.-யில் உள்ள மொத்த மகளிர் சுய உதவிக் குழுக்கள்	12617	523	13140
மொத்த சுய உதவிக்குழு உறுப்பினர்கள்	231471	7845	239316
ஐ.வி.டி.பி. குழுக்களின் மொத்த சேமிப்பு	₹ 589 கோடி	₹ 33.5 கோடி	₹ 622.5 கோடி
ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற இலாபப்பங்கீடு	₹ 450 கோடி		₹ 450 கோடி

கடன் விவரம்

விவரம்	ஜுலை 2018 வரை	ஆகஸ்டு 2018-நவம்பர் 2018	நவம்பர் 2018 வரை
ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை	₹ 3040 கோடி	₹ 126 கோடி	₹ 3166 கோடி
ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்க கடன் தொகை	₹ 2881 கோடி	₹ 80.5 கோடி	₹ 2961.5 கோடி
ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை	₹ 140.62 கோடி	₹ 7.73 கோடி	₹ 148.35 கோடி
ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத்திட்டங்களுக்காக செலவிட்ட தொகை	₹ 158.12 கோடி	₹ 4.78 கோடி	₹ 163 கோடி
மொத்த கடன் சுழற்சி	₹ 6219.74 கோடி	₹ 219.1 கோடி	₹ 6438.85 கோடி

மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

மனிதன் மனித நேயத்துடன் இருப்பதை விட மகத்தான காரியம் வேறு எதுவும் இல்லை

(ஐ.வி.டி.பி. நேரடியாகவும் குழுக்களின் பங்களிப்பாகவும் வழங்கிய தொகை)

விவரம்	ஜுலை 2018 வரை	ஆகஸ்டு 2018-நவம்பர் 2018	நவம்பர் 2018 வரை
உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கை பாதுகாப்பு நிதி	₹ 23.33 கோடி		₹ 23.33 கோடி
கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கேரள வெள்ள நிவாரணம், கஜா புயல் போன்ற பணிகளுக்காக ஐ.வி.டி.பி. குழுக்கள் வழங்கிய தொகை	₹ 2.00 கோடி	₹ 1.65 கோடி	₹ 3.65 கோடி
உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட குடிசை தீ விபத்து நிதி, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினம்	₹ 40.85 இலட்சம்	₹ 80 ஆயிரம்	₹ 41.65 இலட்சம்
மருத்துவமனை, சிறைகள், முதியோர் இல்லம். Women Empowerment Award ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டது	₹ 1.38 கோடி	₹ 10 இலட்சம்	₹ 1.48 கோடி
கல்வி பணிகளுக்காக வழங்கிய தொகை	₹ 22.87 கோடி	₹ 72.75 இலட்சம்	₹ 23.6 கோடி
ஊக்குனர்களுக்கு மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை வழங்கியது.	₹ 3.87 கோடி	₹ 13 இலட்சம்	₹ 4 கோடி
மொத்தம்	₹ 53.86 கோடி	₹ 2.62 கோடி	₹ 56.48 கோடி

ஐ.வி.டி.பி. தன்னார்வ தொண்டு நிறுவனம்

ஐ.வி.டி.பி. இல்லம்,
9இ, சாந்தி நகர் 3வது கிராஸ்,
கிருஷ்ணகிரி-635 001,

04343-232 129, 236 420
francis@ivdpkrishnagiri.org
www.ivdpkrishnagiri.org

40 INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
1979 IVDP 2019
TOWARDS TRANSFORMATION